செ.வெ.எண்: 06/ஜூலை நாள்: 04.07.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் சுமைதூக்கும் பணியாளர்கள் நியமனம் செய்திட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இராமநாதபுரம் கிடங்கை இரண்டாகப் பிரித்து கீழக்கரை தாலுகாவிற்கு இராமநாதபுரம் கிடங்கிலிருந்து பொதுவிநியோகத் திட்ட உணவுப்பொருள்கள் இயக்கம் செய்யப்பட்டு வருகிறது. இராமநாதபுரம் கிடங்கிற்கு சுமை தூக்கும் தொழிலாளர்கள் 15 நபர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

எனவே சுமைதூக்கும் பணிக்கு அனுபவம் / தகுந்த உடல்திறன் மற்றும் 21 வயதுக்கு மேல் 35 வயதிற்குள் உள்ள நபர்கள் இந்த பணிக்கு வர விருப்பமுள்ளவர்கள் தங்களது குடும்ப அட்டை, புகைப்படம் - 2 (Passport size Photo), வாக்காளர் அடையாள அட்டை மற்றும் நல்ல உடல்திறன் உள்ளமைக்கான மருத்துவச்சான்று ஆகியவற்றை இணைத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

மண்டல மேலாளர்
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
மாவட்ட ஆட்சியர் வளாகம்
இராமநாதபுரம்.

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**